# மன்முனை மேற்குப் பிரதேசத்தில் சித்தாயுர்வேத வைத்தியம்

**Supervisor**
*Mr. S. Muhunthan,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

**Researcher**
*Ms. Y. Harthiyayini,*
*Discipline of Hindu civilization,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

## ஆய்வுச் சுருக்கம்

பன்னெடுங் காலமாக மக்கள் தம் வழக்கில் கொண்டுள்ள ஒருசமயத் துறையாக இந்து நாகரிகம் உள்ளது. இது அண்டவியல், இரசாயணவியல், வானியல், இயற்பியல், மருத்துவம் எனும் முறைசார் அறிவியற் புலங்களை தன்னுள்ளே கொண்டுள்ளது. அந்த வகையில் இந்து நாகரிகத்திற்கேயுரிய மருத்துவமானது இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இந்துக்களின் அறிவியல் வளர்ச்சியில் ஒரு பரிணாமமாக மருத்துவத்துறையும் சிறப்புற்று விளங்குகிறது. இந்து நாகரிக வரலாற்றில் பல துறைகளிலும் ஏற்பட்ட பண்பாட்டுக் கலப்பினைப் போலவே இந்து மருத்துவத் துறையிலும் ஆயுர்வேத, சித்த மருத்துவ மரபுகள் தம்முள் கொண்டும் கொடுத்தும் கலப்புற்று வளர்ச்சி பெற்றன. இதுவே தற்கால இந்து சமூகத்தினரிடையே சித்தாயுர்வேத மரபாக அறியப்படுகின்றது.

பிணியினைப் போக்குதல், ஆரோக்கியம் காத்தல், நீண்ட ஆயுளைத்தரவல்ல முறைமையால் இந்துக்களில் மருத்துவக்கலையானது காலம் காலமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. இந்தியாவின் வடநாட்டாரின் சுதேச மருத்துவம் ஆயுர் வேதம் என்றும் தென்நாட்டாரின் சுதேச மருத்துவம் சித்த மருத்துவம் என்றும் அழைக்கப்படுகிறது. சித்த மருத்துவத்தின் மூல நூல்கள் தமிழ் மொழியிலும் ஆயுர் வேதத்தின் மூல நூல்கள் சமஸ்கிருத மொழியிலும் காணப்படுகின்றன. இவ்விரு மருத்துவமும் இணைந்து சித்தாயுர்வேத மருத்துவம் என புதியதோர் பரிணாமம் பெற்றது. ஆயுர்வேதமானது வேதகாலம் முதல் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. வேதங்களில் ரிக்வேதத்தின் ஔஷத சூக்தம், சுக்கிலயசூர் வேதம், சாம வேதம், அதர்வண வேதத்தின் பேஷஜானி, ஆயுஷ்ஜானி சூக்தப்பகுதி, தைத்திரீய சம்ஹிதை, பிருகதாரணியத்திலும் மருத்துவ குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இதனைத்தொடர்ந்து வந்த காலப்பகுதி ஆயுர் வேதத்தின் பொற்காலப்பகுதியென சிறப்பிக்கப்படுகின்றது. ஆர்த்திரேயர், தன்வந்த்ரி, சரகர், சுஸ்ருதர், வாக்பட்டர் போன்றோரால் வைத்திய நூல்கள் இயற்றப்பட்டன. இந்நூல்களிலே எண்வகை மருத்துவ முறை பற்றிச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. பின்வந்த பல்லவர் காலப்பகுதியிலே மருத்துவத்துறையானது மன்னர்களின் ஆதரவுடன் வளர்க்கப்பட்டது. அத்துடன் நாயன்மார், ஆழ்வார்களது பாடல்களிலே மருத்துவச் சிந்தனைகள் பயில்நிலையிலும் காணப்படுகின்றது. அடுத்து வந்த சோழர்காலப்பகுதியிலேயும் மருத்துவமானது அரசர்களின் ஆதரவுடன் வளர்க்கப்பட்டது மருத்துவமனைகள் பல தமிழகத்தின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்டிருந்தன. இக்காலத்திலே தோற்றம்பெற்ற சீவக சிந்தாமணி, கம்பராமாயணம் மற்றும் ஏனைய இலக்கியங்களிலும் இதனைக் காணலாம்.

இதனையடுத்துவந்த காலமான விஜயநகர நாயக்கர் காலப்பகுதியிலேயே மருத்துவத்துறையானது புதுவிதமான முறையில் வளர்ச்சி பெற்றது. இக்காலப்பகுதியில் பதினெண் சித்தர்களால் சித்த மருத்துவம் வளர்க்கப்பட்டுள்ளமையைக் காணலாம். இவர்களால் சித்தவைத்தியம் தொடர்பான நூல்கள் உருவாக்கம் பெற்றன. இந்நூல்களிலே அட்டமா சித்திகள், ரசவாதம், மந்திரம் என்பன தொடர்பான விடயங்களும் அவற்றினூடாக

சுகவாழ்விற்குரிய நடைமுறை ஒழுங்குகள், உணவுப் பழக்கவழக்கங்கள் முதலான பல விடயங்களும் கூறப்பட்டுள்ளன. மனிதனைப் பற்றும் பிணிகள் உடற்பிணி, உயிர்ப்பிணி, பிறவிப்பிணி எனவும் மருத்துவங்களாக தேவ மருத்துவம், மனித மருத்துவம், ராட்சத மருத்துவம் எனவும் சித்தர்கள் பாகுபடுத்தி கூறியுள்ளனர்.
இவ்வாறான முறையில் சித்தாயுர்வேத மருத்துவ துறையானது இந்தியாவை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்ற அதேசமயம் ஈழத்திலும் வளர்ச்சி பெற்று வந்துள்ளது. தனக்கெனத் தனியான இடம் பிடித்த சித்தாயுர்வேதமானது இந்து மதத்தினது துணை கொண்டே வளர்ச்சிபெற்று வந்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்குப் பிரதேசத்திலும் இந்துப் பாரம்பரியத்திற்கேயுரிய சித்தாயுர்வேதமானது இன்றும் நிலைபெற்றுள்ளது. இக்கிராமப்புறங்களில் வாழும் மக்கள் பெரும்பாலும் மீன்பிடி, விவசாயம் போன்ற தொழில்களையே செய்துவருகின்றனர். இங்கு கிராமப்புற வழக்காறுகளே அதிகமாகக் காணப்படுகின்றன.

அதாவது, கிராமப்புற மக்கள் மத்தியில் காணப்படும் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், கலைகள், அறிவியல் மற்றும் பாரம்பரியங்கள் போன்றனவே இங்கு அதிகமாக உள்ளன. இத்தகைய நாட்டாரியல் அம்சங்கள் பொருந்தியுள்ள இப்பிரதேசத்திலே நாட்டார் அறிவியலிலே முக்கியமாகக் காணப்படுவது இத்தமிழ் மருத்துவம் ஆகும். இம்மருத்துவமானது இங்குள்ள மக்களுக்கு பெரும் பங்காற்றிவருகின்றது. இந்த மருத்துவ முறைகள் ஆய்வுப்பிரதேசத்திலுள்ள மக்கள் மத்தியில் எவ்வெவ் வகையில் பயன்படுத்தப்படுகின்றன என்றும் மக்கள் மத்தியில் இம்மருத்துவவியல் கூறுகள் எத்தகைய முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன என்பனவற்றை ஆராய்ந்து மக்களுக்கு வெளிக்காட்டுவதாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

இவ்வாய்வின் நோக்கங்களாக, இந்து நாகரிகத்துறைசார் ஆய்வு முயற்சி என்ற வகையில் மண்முனை மேற்கு பிரதேசத்தில் சித்த மருத்துவமாகவும் நாட்டுப்புற மருத்துவமாகவும் தமிழ் மருத்துவமாகவும் வெகுசன வழக்கில் அறியப்படுகின்ற சித்தாயுர்வேத மருத்துவப் பாரம்பரியத்தின் பயில் நிலைகளை இனங்கண்டு கொள்ளல், குறித்த பிரதேசத்தில் உள்ள நாட்டுப்புற மருத்துவவியல் தொடர்பிலான தகவல்களை ஆவணப்படுத்தல், ஆய்வுப் பிரதேசத்தில் மருத்துவவியல் தொடர்பான செயன்முறைகள், கையாளப்படும் விதம் என்பவற்றை இனங்காணல். இங்கு நடைமுறையிலுள்ள மருத்துவவியற் கூறுகள் புராதன இந்து மருத்துவப் பாரம்பரியத்தினது தொடர்ச்சியாக அமைந்துள்ளமையினையும் அது பேணப்பட்டு வருவதனையும் நிரூபித்தல்.

மட்டக்களப்பின் மண்முனை மேற்குப் பிரதேசத்தினை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

ஆய்வு ஒன்றுக்கு எல்லா வகையிலும் பொருத்தமுள்ளதாக அமைவதே ஆய்வு முறையியல் ஆகும். இதனை அடிப்படையாகக் கொண்டதாகவே ஆய்வு முறைகள் தெரிவு செய்யப்படுகின்றன, தரவு மூலங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு தரவுகளின் வகைகள், ஆய்வுக்கான தரவுகளை சேகரிக்கும் முறை, பகுப்பாய்வு முறை மற்றும் பகுப்பாய்வு முறையின் பொருத்தப்பாடு போன்ற பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. இப்பிரதேசங்களில் அதிகளவிலே மருத்துவ முறைகள் காணப்பட்டாலும் மருத்துவவியலாளர்கள் மருத்துவ முறையில் மருந்து தயாரிக்கும் இடம், முறைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டே இவ்வாய்விற்குப் பிரதேசங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இவ்வாய்விலே ஆய்வாளரால் முதலாம் நிலைத்தரவு, இரண்டாம் நிலைத் தரவு எனும் இரு மூலங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாய்வின் முதலாம் நிலைத் தரவுகளாக கள ஆய்வின் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்களே விளங்குகின்றன. அந்த வகையில் ஆய்வுப் பிரதேசத்திலுள்ள மருத்துவ முறைகளை மேற்கொள்ளும் கிராமிய வைத்தியர்களிடம் நேரடியாகச் சென்று பெற்ற தகவல்களும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் நாட்டார் மருத்துவவியல் தொடர்பான ஏடுகளுமே முதன்மைச் சான்றுகளாக அமைந்துள்ளதுடன் இவ்வாய்வின் போது நேரடியாகச் சென்று பேட்டி முறை, உற்று நோக்குதல் முறை மூலம் பெற்ற தகவல்களும் புகைப்படங்களுமே இவ்வாய்வின் முதன்மைத் தரவுகளாக உள்ளன. இவ்வாய்வின் இரண்டாம் நிலைத் தரவுகளாக ஆய்வாளரால் பயன்படுத்தப்படுபவை இவ்வாய்விற்குத் துணை செய்யும் வகையில் காணப்படும் பத்திரிகைகள், புத்தகங்களில் வெளிவந்த கட்டுரைகள் என்பன அடங்குகின்றன.